அவர்களுடைய கருத்து கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

44—

கம்பிவட ஊர்தி

***3120—திரு. அம்மன் K. அர்ச்சுணன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் (வடக்கு) தொகுதி, மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு கம்பிவட ஊர்தி வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு கம்பிவட ஊர்தி அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை அந்தப் பகுதிவாழ் மக்களிடையே பொதுவாக இருந்து வருகிறது. மண் பரிசோதனை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, கம்பிவட ஊர்தி வசதி ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று பொதுப் பணித் துறையால் அறிக்கை தரப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன் அவர்கள்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா ஆகிய இருபெரும் தெய்வங்களை வணங்கி,

2022 மார்ச் 23]

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதல்வர், கழக இணை ஒருங்கிணைப்பாளர், சேலத்து சிங்கம் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், கழக ஒருங்கிணைப்பாளர், தென்பாண்டிச் சிங்கம் அண்ணன் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களையும், எங்கள் மண்ணின் மைந்தர், எதையும் தாங்கும் இதயம், என்னை இந்த அவைக்கு இரண்டாவது முறையாக அழைத்து வந்த என் உயிரினும் மேலான எதிர்க்கட்சிக் கொறடா அன்புச் சகோதரர் மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களையும் வணங்கி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன் அவர்கள், கேள்வி நேரத்தில் கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள், பட்ஜெட் மற்றும் மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில் பேசும்போது எல்லாவற்றையும் சொல்லுங்கள்; தவறு இல்லை. கேள்வி நேரத்தில் கேள்வியை மட்டும் கேளுங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் எல்லோரும் பேசுகிறபோது, எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆகியோரை பாராட்டி நன்றி சொல்கிறார்கள். இப்போதுதான் ஒருவர் எதிர்க்கட்சிக் கொறடா அவர்களுக்கு நன்றி சொல்கிறார். பாவம், விடுங்கள். எதிர்க்கட்சிக் கொறடா அவர்களுக்கு நன்றி சொல்லட்டும். (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன் அவர்கள்.*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்கி, கோயம்புத்தூர் வடக்கு தொகுதியில் அமைந்துள்ள மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் பக்தர்களின் வசதிக்காக ரோப் கார் அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2022 மார்ச் 23

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பிவட ஊர்தி வசதி செய்து தர சாத்தியக்கூறுகள் இல்லை என்றவுடன் ரோப்கார் அமைக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பார்கள் என்று தெரிந்துதான், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எங்களைப் பணித்ததன்பேரில், கடந்த ஆண்டு, 30–12–2021 அன்று நேரடியாக அந்தத் திருக்கோயிலில் கள ஆய்வு மேற்கொண்டோம். அப்போது, திருக்கோயிலின் கீழே இருந்து வருகின்ற மலைப் பாதை முடிவுற்றவுடன், சுமார் 20.4 மீட்டர் கொண்ட 100 படிக்கட்டுகளில் ஏறி சுவாமி தரிசனம் செய்வதில் பக்தர்களுக்கு சிரமம் இருப்பதை அறிந்தோம். உடனடியாக 11 பேர் கொண்ட ஒரு வல்லுநர் குழுவை நியமித்து, அதற்குண்டான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அறிக்கை அளித்ததன்பேரில், சுமார் 3 கோடியே 36 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய் செலவில் மின்தூக்கி அமைப்பதற்கு மாண்புமிகு தலைவர் தமிழக முதலமைச்சர் அவர்கள் அனுமதியளித்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அடுத்த மாதத்திற்குள்ளாக அந்தப் பணியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக துவக்கி வைப்பதாக உறுதி அளித்திருக்கிறார்கள். கேளாததையும், கேட்பதையும் தருகின்ற முதலமைச்சராக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு சான்று ஆகும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன் அவர்கள்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாத்தியக்கூறுகள் இல்லை என்று கூறிவிட்டார். ஆறுபடை வீடுகளுக்கு அடுத்து ஏழாவது படைவீடாக விளங்கும் மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் பிரசித்தி பெற்ற திருக்கோயிலாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உண்மைக்கு மாறாக ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். பிப்ரவரி மாதம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் முதல்வருமான அருமை அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களுடைய தலைமையிலான ஆட்சியில் ரூ.3.40 கோடி நிதி ஒதுக்கீடு

2022 மார்ச் 23]

செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளியும் கோரப்பட்டு, அடிக்கல்லும் நாட்டப்பட்டது. அந்த அடிக்கல் நாட்டு விழாவில் நானும் கலந்துகொண்டேன். ஆனால், தாங்கள், இப்பொழுது அந்தப் பணியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக துவக்கி வைப்பார் என்று கூறுவது எந்தவிதத்தில் நியாயம் என்பது எனக்குத் தெரியவில்லை. உண்மையிலேயே மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசினால் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 'மாமியார் உடைத்தால் மண் குடம், மருமகள் உடைத்தால் பொன் குடம்' என்று கிராமத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். அதுபோன்று, யார் உடைத்தாலும் சரி, அங்கிருக்கும் மக்களுக்காக தயவுசெய்து நீங்கள் lift *வசதியையாவது செய்து கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு விடைபெறுகிறேன்.*

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு வேண்டாமென்பதால் அடக்கி வாசிக்கின்றோம். இல்லையெனில், நிறைய கருத்துகளைச் சொல்லலாம். பிப்ரவரி மாதம் 26 ஆம் தேதி எந்தெந்த பணிகளெல்லாம் செயல்பாட்டுக்கு வரவில்லையோ, எந்தெந்த பணிகளெல்லாம் முடிவுறாமல் இருந்தனவோ, அவை அனைத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சிமூலம் திறந்து வைத்துவிட்டார். நான் பேசியதை உறுப்பினர் உன்னிப்பாகக் கேட்கவில்லை என்று கருதுகிறேன். அங்கு ரோப் கார் வசதி செய்து தருவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. அதற்கு அடுத்தாற்போல் மின்தூக்கிக்கான டெண்டர் கோரப்பட்டது.* Single tender *என்பதால், அது உங்கள் ஆட்சிக் காலத்திலேயே இரத்து செய்யப்பட்டு விட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் நாங்கள் அங்கு கள ஆய்வுக்கு சென்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) முழுமையாக கள ஆய்வு செய்து, மீண்டும் டெண்டர் கோரப்பட்டது. நீங்கள் ஏற்கெனவே ஒதுக்கியிருந்த தொகையைவிட 60 இலட்சம் ரூபாய் அதிகமாக தேவை இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அதையும் ஒதுக்கீடு செய்து,*

ரூ.3 கோடியே 60 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாய் செலவில் டெண்டர் கோரப்பட்டு, அதனை முழுமை பெறச் செய்து, 10 நாட்களுக்குள் அதற்கான technical sanction வழங்கப்பட்டு, அந்தப் பணிகளுக்கான ஒப்பந்தமும் பெறப்பட்டு, அடுத்த மாத இறுதிக்குள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அந்த மின் தூக்கியைச் செயல்பாட்டுக்குக் கொண்டு வருவார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்கள்.

திரு. A.P. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், என்னுடைய அணைக்கட்டு தொகுதியில், பிரசித்தி பெற்ற பள்ளிகொண்டா ரெங்கநாதர் கோயில், வெட்டுவானம் எல்லையம்மன் கோயில், விரிஞ்சிபுரம் மார்கபந்தீஸ்வரர் கோயில், புகழ்பெற்ற Golden Temple-தங்கக் கோயில் ஆகியவை இருக்கின்றன. இந்த 4 புகழ்பெற்ற திருத்தலங்களிலே பள்ளிகொண்டா ரெங்கநாதர் கோயிலில் அன்னதானத் திட்டம் துவங்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, அன்னதானத் திட்டம் 754 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. கடந்த ஆட்சி இருந்த வரையில், வெறும் 34 திருக்கோயில்களுக்குத்தான் ஒன்றிய அரசால் வழங்கப்படுகின்ற BHOG என்கின்ற உணவுக் கட்டுப்பாட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, பக்தர்களுக்கு இந்த அன்னதானத்தைச் சிறந்த முறையில் வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் எதிரொலியாக, 34 திருக்கோயில்களுக்கு வழங்கப்பட்டு வந்த BHOG என்ற அந்த தரக் கட்டுப்பாட்டுச் சான்றிதழ் தற்போது 341 திருக்கோயில்களுக்கு ஒன்றிய அரசால் வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தத் திருக்கோயிலில் சுமார் 19 இலட்சம் ரூபாய்தான் பசலி வருமானம் இருக்கிறது. இருந்தாலும் அருகாமையிலே இருக்கின்ற

2022 மார்ச் 23]

அதிக நிதி வருகின்ற திருக்கோயில்களிலிருந்து அன்னதானத் திட்டத்தைச் செயல்படுத்துகிற சாத்தியக்கூறுகள் இருந்தால் நிச்சயம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு அதைப் பெற்றுத் தருவதற்கான ஏற்பாடு செய்யப்படும். அதேபோல் அந்தத் திருக்கோயிலுக்கு 2011 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடந்து முடிந்திருக்கிறது. இந்த ஆண்டு அந்தத் திருக்கோயிலுக்கு திருப்பணி மற்றும் குடமுழுக்குப் பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் மாண்புமிகு உறுப்பினருடன் பகிர்ந்துகொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோவிலில் அமைந்திருக்கின்ற திருமுட்டம்பேரூரில் பூவராகசுவாமிகள் ஆலயம் இருக்கிறது. இந்த ஆலயத்தில் உற்சவராக இருக்கிற யக்ஞ வராக சுவாமிகளுடைய அலங்கார ஆசனம் என்று சொல்லப்படுகிற பீடம் சேதமடைந்து, கடந்த சில ஆண்டுகளாக உற்சவரை எழுந்தருளச் செய்ய இயலாத நிலை தொடருகிறது. வள்ளலார் காட்டிய பாதையில் சமய நம்பிக்கை உடையவர்களின் வாழ்க்கையில் சரித்திர சாதனைகளைத் தொடர்ந்து செய்து வருகிற திராவிட முன்னேற்றக் கழக அரசு, அந்த உற்சவருக்கு ஜடிபந்தனம் என்கிற பற்றவைப்பு மூலமாக அதைச் சரிசெய்திட விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்கிற கோரிக்கையை வைத்து, அதை உடனடியாக செய்து முடிக்க அரசு முன்வருமா என தங்கள்வாயிலாகக் கேட்டறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருக்கோயிலில் திருப்பணி செய்ய நம்முடைய உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற ஜடிபந்தனம் சம்பந்தமாக ஏற்கெனவே அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தார். அதற்கு உடனடியாக திட்ட அனுமதியளிக்கப்பட்டு, தற்போது ஆணையர் அனுமதியை எதிர்நோக்கி இருக்கின்றது.*

இரண்டொரு நாட்களில் ஆணையர் அனுமதியைப் பெற்றவுடன், உடனடியாக அதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, வெகுவிரைவில், அடுத்த மாத இறுதிக்குள் உங்கள் கோரிக்கையையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள்.*

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரிய வாய்ப்பைத் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வணங்குகிறேன். புகழ்பெற்ற திருச்சி உச்சிப் பிள்ளையார் மலைக் கோட்டை கோயிலுக்கு* Rope Car *வசதி செய்து தரப்படும் என்று நமது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்ததை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கூறியுள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஆய்வுக்கு அங்கு வந்திருந்தார்கள். அந்த அறிவிப்பு, இந்த நிதியாண்டில் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தேர்தல் அறிக்கையிலே ஐந்து மலைக் கோயில்களுக்கு* Rope Car-*கள் வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அந்தவகையிலே, நிபுணர் குழுவை நியமித்து, தற்போது திருச்சி உச்சிப் பிள்ளையார் மலைக் கோயிலுக்கும், அதோடுமட்டுமல்லாமல் திருக்கழுக்குன்றம் மற்றும் திருநீர்மலை ஆகிய மூன்று கோயில்களுக்கும் நிபுணர் குழுவால்* technical sanction-*க்கு தற்போது ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கின்றது. வெகுவிரைவில் அதற்குண்டான பணிகளைத் துரிதப்படுத்தி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று,* Rope Car *வசதி நிச்சயம் செய்து தரப்படும். உறுப்பினரால் திருச்சி உச்சிப் பிள்ளையார் கோயிலில் ஏற முடியவில்லை. நாங்கள் ஆய்வுக்கு சென்றபோது, (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய அருமை அண்ணன்*

TRUTH ALONE TRIUMPHS

2022 மார்ச் 23]

திரு. நேரு அவர்களும், திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களும் எங்களுடன் பயணித்தார்கள். அவருக்காகவாவது நிச்சயம் அந்த மலைக் கோயிலுக்கு Rope Car *வசதி செய்யப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள். உங்களுக்கு, அங்கு மலைக் கோயில் இருக்கிறதா? இது மலைக் கோயில் விவகாரம்.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கிறது. திருவண்ணாமலை மாவட்டம், போளூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ளடங்கியிருக்கின்ற பிரசித்தி பெற்ற சம்பத்கிரி அருள்மிகு லட்சுமி நரசிம்மர் ஆலயம், 1,500 அடி உயரத்திலே 840 படிகள் கொண்டதாக இருக்கின்றது. இந்த மலைக் கோயிலுக்குச் செல்வதற்கு நான்கு சக்கர வாகன வசதியோடுகூடிய மலைப் பாதை அமைத்துத் தரப்படுமா என்று தங்கள் வாயிலாக இந்த அரசைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அருள்மிகு லட்சுமி நரசிம்மர் ஆலயத்திற்குச் செல்வதற்கு 840 படிகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார். உண்மையில் எந்தெந்த திருக்கோயில்களுக்கெல்லாம், என்னென்ன அடிப்படை வசதிகள் வேண்டுமென்று ஆராய்வதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, இந்து சமய உயர்நிலைக் குழுவினை அமைத்தார். அவர் தலைமையில், முதன்முதலில் வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு, இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவலகத்தில் அவரே பங்கேற்று, மூன்று மணி நேரம் அந்தக் கூட்டத்தை நடத்திய பெருமை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில், அந்தக் குழுவினுடைய பரிந்துரையில் நீங்கள் குறிப்பிட்ட அந்த நரசிம்மர் ஆலயம் இடம் பெற்றிருக்கிறது. சாத்தியக்கூறுகள் இருப்பின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, அடுத்து வருகின்ற மானியக் கோரிக்கையிலே*

அதை அறிவிப்பாக வெளியிடுவதற்குண்டான முயற்சிகளை மேற்கொள்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய கோயில்களில் அதிக வருமானத்தை ஈட்டித் தருகின்ற முதல் கோயிலாக இருக்கின்ற அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு இரண்டாவது* Rope Car *வசதி செய்வதற்கான பணிகள் குறித்த ஐயங்களையெல்லாம் ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே இரண்டு முறை ஆய்வுகளை மேற்கொள்கின்றபோது தெளிவுபடுத்தியிருக்கின்றார். வரும் ஆண்டில் கும்பாபிஷேகம் நடைபெறக்கூடிய ஒரு சூழ்நிலை அங்கே உருவாகிக் கொண்டிருக்கிறது. எனவே, அந்த இரண்டாவது* Rope Car *திட்டத்தை விரைந்து முடித்து பக்தர்களுக்கு அர்ப்பணிக்க நம்முடைய அரசு முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.*

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் என்பது பக்தர்கள் வருகைதந்து சாமி தரிசனம் செய்துவிட்டு செல்கின்ற வெறும் திருக்கோயிலாக மட்டுமல்லாமல், மனநலம் குன்றியவர்களுக்கு முழுநேர அன்னதானத் திட்டம், மலை ஏறுபவர்களுக்கு மருத்துவமனை வசதிகள், கல்லூரிகள், பள்ளிகள் என்று பல்வேறு சமுதாயப் பணிகளும் அந்தத் திருக்கோயில் சார்பிலே நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே, அங்கு இரண்டு* winch–*கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய* rope car *திட்டம் தொடர்பாக கடந்த ஆட்சிக் காலத்தில், 70 கோடி ரூபாய்க்கு டெண்டர் விடப்பட்டுள்ளது. என்ன காரணம்*

2022 மார்ச் 23]

என்று தெரியவில்லை; அந்த டெண்டர் எடுத்த ஒப்பந்ததாரர் 2016-க்கு பிறகு, 2021 ஆம் ஆண்டு வரை அந்தப் பணியைத் தொடங்கவில்லை. மேலும், அந்த மாவட்டத்தினுடைய அமைச்சர், அருமை அண்ணன் திரு. ஐ.பி. அவர்களும், மாண்புமிகு அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்களும் என்னிடம் நேரடியாக வைத்த கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு, இதுவரை, 5 முறை அந்தத் திருக்கோயிலுக்கு நான் ஆய்வுக்காகச் சென்றிருக்கிறேன். தற்போதுதான் அந்தப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இன்னும், 18 மாதங்களுக்குள்ளாக அந்தப் பணிகளை நிறைவு செய்வதாக ஒப்பந்ததாரர் உறுதியளித்திருக்கின்றார். வெகு விரைவில், 2024 ஆம் ஆண்டிற்குள் அந்த rope car *வசதி பக்தர்களின் பயன்பாட்டுக்கு அர்ப்பணிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தனை செல்வன் அவர்கள் இங்கே ஒரு கேள்வி கேட்டிருக்கிறார். அதற்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கிறது. இன்றைக்கு, நாலாயிர திவ்ய பிரபந்தம் என்ற நூலை தமிழ் வேதமாக வைத்திருக்கின்றோம். பன்னிரு ஆழ்வார்களால் பாடப்பெற்ற அற்புதமான பாடல்கள் இவற்றில் இடம் பெற்றிருக்கின்றன. இந்தப் பாடல்களெல்லாம் இன்றைக்கு நம்முடைய கையிலே கிடைத்திருக்கிறதென்றால், அதற்கு காட்டுமன்னார்கோவில்தான் காரணம். நாதமுனி அவர்கள் அந்தப் பகுதியிலே குளித்துக் கொண்டிருந்தபோது, யாரோ இரண்டு பேர் 'தெள்ளோமே ஆயிரம்' என்று பாடிக் கொண்டே சென்றார்கள். அந்த இயற்றடியைக் கேட்டவுடன், 'முழு பாடல்களையும் சொல்லுங்கள்' என்று நாதமுனி கேட்டார். 'எங்களுக்குத் தெரியாது' என்றனர். 'இதை யார் எழுதியது?' என்று கேட்டார். 'யாரோ, எங்களுக்குத் தெரியாதவர் சொல்லிக் கொடுத்தார்; அந்தப் பாட்டை எழுதியவர் நம்மாழ்வார்' என்று சொன்னார்கள். 'அவர் எங்கே இருக்கிறார்?' என்று கேட்டார். 'அவர், திருச்சிராப்பள்ளிக்குப் பக்கத்திலே உள்ள ஆழ்வார்குறிச்சியில் இருக்கின்றார்' என்று சொன்னார்கள். பின்னர், அவர் அங்கு*

சென்று, பல ஆண்டுகளாக அங்கே தங்கியிருந்து, அவருடைய சிஷ்யனாக இருந்து, கொஞ்சம் கொஞ்சமாக அந்த நாலாயிரம் பாடல்களை திரட்டிக் கொண்டுவந்து கொடுத்ததால்தான், இன்றைக்கு, தமிழ் இலக்கியத்திலே, தமிழ் மொழியிலே இருக்கின்ற அற்புதமான பாடல்களைக் கொண்ட நாலாயிர திவ்ய பிரபந்தம் வைணவர்களுடைய தமிழ் வேதமாக இருக்கின்றது. இன்றைக்கு, இவ்வளவு பெரிய வைணவத்திற்கு உயிர் கொடுத்திருப்பது நாலாயிர திவ்ய பிரபந்தம். காட்டுமன்னார்கோவில்மூலம் நம்முடைய தமிழுக்குக் கிடைத்த பெரிய நன்கொடை இது. மாண்புமிகு திரு. பன்னீர்செல்வத்துக்கு தெரியுமோ தெரியாதோ என்று எனக்குத் தெரியாது. ஆனால், திரு. சிந்தனை செல்வனுக்குத் தெரிந்திருக்கிறது, அதனால் கேட்டிருக்கிறார். ஆகையினால், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அவருடைய கேள்விக்கு உரிய மரியாதை கொடுத்து, அதை செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

45—

புதிய சார் கருவூலம்

***6751—திரு. S. சந்திரன்**

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, இரா.கி. பேட்டை வட்டத்தில் புதிய சார் கருவூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், இரா.கி. பேட்டை வட்டத்தில் நாளது தேதியன்று சார் கருவூலம் ஏதும் செயல்படவில்லை. சார் கருவூலங்கள் இல்லாத வட்டத்